**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 145/2023</u>**

**<u>நாள் – 13.08.2026</u>**

**<u>PW – 1</u>** முருகேசன்

**த/பெ.** ராமசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2026.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தின் மீது மோதி வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 2–ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் தகுதிச்சான்று காலாவதியாகிவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அதனால், அந்த வாகனத்தின் காப்பீட்டாளரான 3–ம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்பதால் இது சம்பந்தமான குற்ற இறுதி அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மாதம் ரூ.20,000/– வருமானம் வந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காப்பீட்டு விதிமீறல் இருப்பதால் 3–ம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அதனால்,

3–ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** :– **இல்லை.**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.08.13 15:48:37 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**